**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 22 /2020**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | தங்கவேலு |
| Village | : | விடையல் கருப்பூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 63 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் நிரந்தரமாக குடியிருப்பது 40, கீழத் தெரு, கீழ விடையல் கருப்பூர் என்றால் சரிதான். நான் இவ்வழக்கை எனது சித்தப்பா சின்னப்பிள்ளைக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். எனது சித்தப்பா குடவாசல் மெயின் ரோடு, கீழ விடையல் கருப்பூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, அங்கு டீக்கடைதான் வைத்துள்ளார். எனது சித்தப்பா எங்கு குடியிருக்கிறார் என்றால் கீழத்தெரு, கீழ விடையலில் குடி இருந்து வருகிறார். இவ்வழக்கிற்கு நான்தான் எனது வழக்கறிஞரிடம் விபரம் கூறினேன். எனது வழக்குரையில் பிரதிவாதியின் முகவரி வலங்கைமான் தாலுக்கா, கீழ விடையல், கருப்பூர் கிராமம், குடவாசல் மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு அனுப்பிய மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு எனது தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.6 ஆக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் பட்டா இருக்கின்ற விபரத்தை எனது வழக்கறிஞரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரம் வா.சா.ஆ.6 ல் காணப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.6 க்கு எனது சித்தப்பா

எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பினை பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் சொல்லப்படும் தாவா சொத்துக்கான அனுபவம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா, எனது தகப்பனாரான தங்கவேலுவிடம் டீக்கடை நடத்துவதற்காக 10 குழி நிலம் வேண்டும் என்று கேட்டார் என்றால் சரியல்ல, 10 குழி என்று அளவு குறிப்பிடவில்லை. எனது தகப்பனாரிடம் எனது சித்தப்பா டீக்கடை நடத்துவதற்காக இடம் கேட்டபோது எனக்கு 43 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது அப்பா தங்கவேலு இறந்த வருடம் சுமாராக 13 வருடம் முன்பு இருக்கும். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். எனது சித்தப்பா எனது தந்தையிடம் நிலம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நிலம் அவரது அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாரின் இரண்டு மனைவிகளும் இறந்துவிட்டனர். நான் பட்டம்மாளுக்கு பிறந்தவர். நான் எனது உடன்பிறந்தவர்களிடம் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கான எழுத்துப்பூர்வமான அதிகார ஆவணம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன், அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். (வழக்கு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.08.05 17:38:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.